கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
கலை கலாசார பீடம், புவியியற்றுறை
இரண்டாம் வருடம் இரண்டாம் அரையாண்டு சிறப்பு/பொதுக் கலைமாணித் தேர்வு 2014/2015 (August 2018)

| OGY 2213 | அனர்த்த முகாமைத்துவம் (Disaster Management) | நேரம் 03 மணித்தியாலங்கள் |
|---|---|---|

- பகுதி – I இல் இருந்து எவையேனும் இரு வினாக்களையும் பகுதி – II இல் இருந்து எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து (05) வினாக்களுக்கு விடை தருக.
- பொருத்தமான இடங்களில் விளக்கப்படங்களின் துணையுடன் விடையளிக்குக.
- எழுத்துக்கள், படங்கள் தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

## பகுதி - I

1) அ. அனர்த்தம் (Disaster), இடர் (Hazard) ஆகிய பதங்களை வரையறுக்குக.

(04 புள்ளிகள்)

ஆ. அனர்த்தங்களை வகைப்படுத்தி, அவற்றின் உலகளாவிய போக்கு குறித்து விளக்குக.

(07 புள்ளிகள்)

இ. கீழ்வரும் அட்டவணையினை பிரதி செய்து அனர்த்த அதிகாரப் படிநிலைகளின் அடிப்படையில் அதனைப் பூர்த்தி செய்க.

| அனர்த்த நிகழ்வுகள் | பொது அனர்த்த வகை | அனர்த்தக் குழு | பிரதான வகை | உப வகை | உப-உப வகை |
|---|---|---|---|---|---|
| இந்து சமுத்திர சுனாமி 2004. | | | | | |
| கொஸ்லந்த நிலச்சரிவு | | | | | |
| உத்தரகாண்டா வெள்ளம் - இந்தியா | | | | | |

(09 புள்ளிகள்)

2) அ. உலகில் இடம்பெறும் இயற்கை அனர்த்த நிகழ்வுகளை அவற்றின் வீதாசார அடிப்படையில் பட்டியலிட்டுக் காட்டுக.

(04 புள்ளிகள்)

ஆ. "உலகில் இடம்பெறும் இறப்புக்களுக்கான காரணிகளில் நிலநடுக்கமே முன்னணியில் திகழும் அனர்த்தமாக விளங்குகின்றது" அதற்கான காரணங்களைக் குறிப்பிடுக.

(08 புள்ளிகள்)

இ. உலகில் அதிகம் அனர்த்தத்தினால் பாதிப்புக்குள்ளாகும் முதல் 10 நாடுகளில் ஆசிய பிராந்திய நாடுகளின் நிலை குறித்து சுருக்கமாக விளக்குக.

(08 புள்ளிகள்)

3) அ. இலங்கை எதிர்கொண்டு வரும் காலநிலையியல் மற்றும் நீரியல்சா அனர்த்தங்களை பட்டியலிட்டுக் காட்டுக.

(04 புள்ளிகள்

ஆ. வெள்ளப்பெருக்கு அனர்த்தம் அண்மைக் காலமாக இலங்கையில் ஏற்படுத்தி வரும் தாக்கங்களை விபரிக்குக.

(06 புள்ளிகள்

இ. வெள்ள ஆபத்து நிலையினை குறைத்து (Risk Reduction) கொள்வதற்கு முன்னெடுக்கக் கூடிய வழிமுறைகள் தொடர்பில் கருத்துரைக்குக.

(10 புள்ளிகள்

## பகுதி - II

4) உமது பிரதேசத்தை மின்னல் தாக்கத்திலிருந்து பாதுகாக்க அனர்த்த முகாமைத்துவப் பின்னணியில் நீர் முன்வைக்கும் ஆலோசனைகளை தெளிவாக முன்வைக்குக.

(20 புள்ளிகள்

5) அனர்த்த முகாமைத்துவம் என்பதனை வரையறை செய்து, அனர்த்த முகாமைத்துவத்தின் இலக்குகள் குறித்து ஆராய்க.

(20 புள்ளிகள்

6) புவிப்பௌதீக அடிப்படையில் இலங்கைக்குள்ள சவால்களை குறிப்பிட்டு, அச்சவால்களைச் சமாளிப்பதற்கு தேசிய மட்டத்திலான அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகள் அமைய வேண்டிய விதம் குறித்து கருத்துரைக்குக.

(20 புள்ளிகள்

7) பின்வருவனவற்றினுள் எவையேனும் இரண்டினிற்கு சிறு குறிப்பு எழுதுக.

அ. அனர்த்த முகாமைத்துவ செயன்முறையில் படங்களின் (maps) முக்கியத்துவம்.

ஆ. அனர்த்த முகாமைத்துவ வட்டம்

இ. இலங்கையில் அனர்த்தக் கல்வியின் அவசியம்.

(2 x10=20 புள்ளிகள்